# "இலங்கையின் பொருளாதாரத்தில் உப்பு உற்பத்தியின் பங்களிப்புகளும் சவால்களும்"- (புத்தளப்பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு)

**Supervisor**
*Ms. ARS. Jesmy,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. AW. Fathima Rushdha,*
*Department of Social Siences,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

உலகில் உள்ள நாடுகள் அனைத்துமே தமது அபிவிருத்தியினை நிலைத்திருக்கச் செய்ய பொருளாதாரத்தை வளர்த்துக்கொண்டு வருகின்றது எனலாம். பொருளாதார அபிவிருத்தியினை உயர்த்த அவை விவசாயத்துறையிலோ அல்லது கைத்தொழில்துறையிலோ ஈடுபட வேண்டிய தேவைக்காணப்படுகின்றது. இலங்கையில் வருடாந்தம் வீட்டுப்பாவனைக்கும் கைத்தொழில் பாவனைக்கும் தேவைப்படும் உப்பின் அளவு அண்ணளவாக 1இலட்சத்து 95 ஆயிரம் மெற்றிக் தொன்களாகும். ஆனால் 1 இலட்சத்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பே வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்றது. பற்றாக்குறையான 40 சதவீத உப்பானது இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்காக வருடாந்தம் 370 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இந்நாடு பல இயற்கை மூலவளங்களைத் தன்னகத்தே கொண்டும் அமைந்துள்ளது. இருப்பினும் இந்நாடு பல பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் காணப்பட்டாலும் ஏனைய நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்வதிலேயே பெரிதும் தங்கியுள்ளது. அந்தவகையில் இயற்கை வளமான உப்பு உற்பத்தி இலங்கையின் பொருளாதாரத்தினை வளர்ச்சியடைய செய்யும் ஒரு கனியம் ஆகும். எனினும் இவ்வுற்பத்தியில் இலங்கை இன்னும் தன்னிறைவு அடையவில்லை எனலாம்.

இலங்கையின் பொருளாதாரத்தில் உப்பு உற்பத்தியின் பங்களிப்பினை கண்டறிதல். புத்தளப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் உப்பு உற்பத்தியின் பங்களிப்பினை இனங்காணல். மேலும் ஆய்வுப் பிரதேசத்தின் உப்பு உற்பத்திக்கான சவால்களை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

இவ்வாய்வுக்குரிய தரவுகளானது முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து முறை மூலம் பெறப்பட்டுள்ளன. இதற்கமைய புத்தளப்பிரதேசத்தில் உப்பு உற்பத்தியினை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களும், தொழிலாளர்களும் எழுமாற்று மாதிரி எடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இங்கு பணிபுரியும் ஊழியர்கள், விற்பனையாளர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறே இவ்வாய்வுக்குப் பொறுத்தமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் குடித்தொகையில் மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 30 உற்பத்தியாளர்களுக்கும் 120 உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் வழங்குவதன் மூலம் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மேலதிக தகவல் இப்பிரதேசத்தில் காணப்படும் உப்பு உற்பத்தி செய்யப்படும் இடத்திற்குச் சென்று நேரடியாக அவதானிப்பதன் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வுக்கான இரண்டாம் நிலைத் தரவுகளானது நூல்கள், சஞ்சிகைகள், முன்னைய ஆய்வுகள், இணையத்தள அறிக்கைகள், இலங்கை கனிய உற்பத்தி அறிக்கைகள்,மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், புத்தள மாவட்டத்தின் கச்சேரியினால் வெளியிடப்படுகின்ற மாவட்ட புள்ளிவிபரத்திரட்டுகள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

இவ்வாய்வின் முடிவுக்கிணங்க உப்பு உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக 90 சதவீதம் நிச்சயமற்ற காலநிலையே காரணமாக அமைந்துள்ளது. 70 சதவீதமானவர்கள் கூலி குறைவு காரணமாக உப்புத் தொழிலில் ஈடுபட தயங்குகின்றனர். உப்பு உற்பத்தியாளர்களை பொறுத்தமட்டில் 80 சதவீதமானவர்கள் உற்பத்தச் செலவு அதிகம் என கூறுகின்றனர்.

உப்பிற்கு பதிலீட்டு பொருள் இல்லாத காரணத்தால் உப்பு உற்பத்தியை இப்பிரதேசத்தில் நவீனமயப்படுத்தி உப்பு உற்பத்தியாளர்களுக்கு மானியத்தொகையும் வழங்கப்படுதல் அவசியமாகும்.

**Key words:** மூலதனம், தன்னிறைவு, நிச்சயமற்ற காலநிலை

# "1995 இற்குப் பின்னரான காலி - அக்மீமனைப் பிரதேசத்தில் வறுமைத் தணிப்பில் நுண்பாக நிதியிடலின் பங்களிப்பு: இலங்கை மற்றும் சமுர்த்தி வங்கிகள் குறித்த ஓர் ஒப்பீட்டாய்வு"


**Supervisor**
*Mr. AAM. Nufile,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. SHK. Himsiya,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இன்றைய உலகில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சிக்கு பிரதான ஒரு தடைக்கல்லாக வறுமை காணப்படுகின்றது. இதனால் வறுமை ஒழிப்பிற்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உள்ளாகியுள்ளன. நுண்பாக நிதிக்கடனானது வறுமை ஒழிப்பிற்கு மிகவும் செயற்றிறன் வாய்ந்த ஒரு கருவியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. நுண்நிதியனாது கடன், பணப்பரிமற்றம், சேமிப்பு, காப்புறுதி போன்ற சேவைகளை சுயதொழில் முயற்சிகளுக்காகவும் வறுமைத் தணிப்பிற்க்காகவும் வழங்கி வருகின்றன. இது வறியவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதற்கான ஒரு சிறந்த கருவியாக விளங்குவதோடு, அவர்கள் பொருளாதார ரீதியாக எதிர்கொள்ளும் சவால்களுக்கும் வழிவகுக்கின்றன. இவ்வாய்வின் பிரதான நோக்கமானது, காலி மாவட்டத்தின் அக்மீமனைப் பிரதேசத்தில் காணப்படும் அரச சார்பான நிறுவனங்களான இலங்கை மற்றும் சமுர்த்தி வங்கிகளினால் வழங்கப்படும் நுண்பாக நிதியிடலானது வறுமைக் தணிப்பில் செயற்றிறனான முறையில் தொழிற்படுகின்றதா என்பதைக் கண்டறிவதாகும்.

இவ்வாய்விற்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரதரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பயனாளிகளை தெரிவு செய்யும் போது இங்கு பங்கு வீத மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தரவுப் பகுப்பாய்விற்கு MS Excel பயன்படுத்தப்பட்டுள்ளதோடு அட்டவணைகளும் வரைபடங்களும் பயன்படுத் தப்பட்டுள்ளன. மேலும் புள்ளி விபரங்கள் பண்புசார் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதோடு ஒப்பீட்டு ரீதியான பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது அக்மீமனைப் பிரதேசத்தில் வறியமக்கள் வருமானத்தைப் பெற்று வறுமையில் இருந்து மீளும் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக பல்வேறுபட்ட அரசசார்பான நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் நுண்பாக நிதியினை வழங்கி வருகின்றன. இவ்நுண்பாக நிதியின் மூலம் இப்பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபடும் பயனாளிகளின் மொத்த வருமானம், சேமிப்பு என்பன அதிகரித்துள்ளதோடு, சுயதொழில் வேலைவாய்ப்பும் அதிகரிக்கப்பட்டு வறுமை மட்டம் குறைவடைந்துள்ளது. அக்மீமனைப் பிரதேசத்தில் நுண்பாக நிதியிடல் மூலம் வறுமையைத் தணிப்பதற்க்காக பின்வரும் பரிந்துரைகள் இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வரச சார்பான நிறுவனங்களினால் வழங்கப்படும் மொத்த நுண்கடன் தொகையை அதிகரித்தல், தொழிற் பயிற்சிகளை வழங்கல், இவ் வங்கி நிறுவனங்களின் செயற்றிட்டங்களுக் கூடாக ஊழியப்படை வீதாசாரத்தை அதிகரித்தல், செயற்பாடுகளை நவீன மயப்படுத்தல், வங்கிகளின் புதிய கொள்கைத் திட்டங்களின் ஊடாக வறிய மக்களையும் அபிவிருத்தியில் பங்குகொள்ளச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை

மேற்கொள்வதன் மூலம் நுண்பாக நிதியிடல் மூலமான வினைத்திறனான அபிவிருத்தியை பெற்றுக் கொள்வதற்கும் வழிவகுக்கும்.

**பிரதான சொற்கள்:** வறுமை, நுண்பாக நிதியிடல், சுயதொழில்

## “1990 காலப்பகுதிக்குப் பின்னரான மீன்பிடித்துறைமுக அபிவிருத்தியும் இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கமும் : பேருவளை மீன்பிடித் துறைமுகம் குறித்த ஓர் ஆய்வு”


**Supervisor**
*Mr. AAM. Nufile,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MHF. Hajistha,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழில் தேசிய உற்பத்திக்கு பிரதான பங்களிப்பை வழங்கி வருகின்றது. இவ்வாய்வானது 1990 காலப்பகுதிக்குப் பின்னரான இலங்கையின் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் போக்கை கண்டறிவதோடு, இலங்கைப் பொருளாதாரத்தில் அது எத்தகைய தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதை இனங்காணுதல் மேலும் பேருவளை பிரதேச மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் கடந்தகால தற்கால நிலைகளைக் கண்டறிதல், ஆய்வுப் பிரதேச மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியானது பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதனை இனங்காணல், மீன்பிடித் துறைமுகத்தில் எதிர்நோக்கும் சவால்ளை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகளை முன்வைத்தல் ஆகிய இலக்குகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாம், இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலை தரவுகள் பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் தொழில் புரியும் மீனவர்கள் 100 பேர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டதுடன், அவதானம், கலந்துறையாடல் முறை போன்றன மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் களுத்துறை மாவட்ட கடற்றொழில் காரியாலயத்தின் பதிவேடுகள், புள்ளி விபரங்கள் என்பவற்றினூடாகவும் இணையத்தளம் மற்றும் நூல் பதிப்புக்கள் என்பவற்றினூடாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இவ் ஆய்வில் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் போக்கானது சுனாமிக்குப் பின்னரே சிறப்பானதோர் அடைவை எட்டியுள்ளது எனலாம். இதன் விளைவாக உட்கட்டமைப்பு விருத்தி, மீன்பிடியுடன் தொடர்புடைய துணைச் சேவைகள் வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம், மீன்பிடித் துறைமுகத்தில் எதிர்நோக்கும் பிரதான சவாலாக மீன்பிடித் துறைமுக மாசாக்கம் விளங்குகின்றது. எனவே இதனைத் தீர்ப்பதற்கான சிறந்த வழி முறையான கழிவுகற்றல், கழிவுகளின் மீள்பயன்பாடு என்பன விளங்குகின்றன.

எனவே, மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தியினால் ஏற்படும் பொருளாதாரச் சாதகத் தன்மைகளை அறிந்து கொள்ள இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை இவ் ஆய்வு வலியுறுத்துகிறது.



**பிரதான சொற்கள்:** மீன்பிடித் துறைமுகம், சுனாமி மற்றும் உட்கட்டமைப்பு விருத்தி

## “1985க்குப் பின்னரான காலப் பகுதியில் இலங்கையின் மொத்த அரச செலவினத்தில் நேரில் வரிகளின் பங்களிப்பு: பெறுமதிசேர் வரி அமுலாக்கமும் அதன் பங்களிப்பும் குறித்த ஓர் ஆய்வு”

**Supervisor**
*Mr. AAM. Nufile,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MSF. Risla,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இன்று அனைத்து நாடுகளிலும் அவற்றின் அரசிறை வருமானத்தை தீர்மானிப்பதில் பிரதான மூலாதாரமாக வரி விதிப்பு இருந்து வருவதை அவதானிக்கலாம். இவ்வாய்வின் பிரதான நோக்கம் இலங்கையின் மொத்த அரச செலவினத்தில் நேரில் வரிகளின் பங்களிப்பினை இனங்காண்பதனூடாக பெறுமதிசேர் வரி (VAT) அமுலாக்கத்தினையும் அதன் பொருளாதாரப் பங்களிப்பினையும் கண்டறிதல் ஆகும். மேலும், ஆய்வு முடிவானது இலங்கையின் மொத்த அரசிறை வருமானத்தில் வரி வருமானத்தின் முக்கியத்துவத்தினை மதிப்பிடல். மொத்த அரசிறை வருமானத்தில் நேரில் வரியான பெறுமதிசேர் வரியில் ஏற்பட்ட மாற்றங்களை கண்டறிதல் போன்ற துணை நோக்கங்களினூடாக அடையப்படுகின்றது

இலங்கையில் விதிக்கப்படுகின்ற பிரதான நேரில் வரிகளான கலால் வரிகள் (Excise Tax), பெறுமதிசேர் வரி (VAT) , இறக்குமதித் தீர்வை (Import Duties) என்பவற்றின் அடிப்படையில் அவற்றின் தன்மைக்கேற்ப காலத் தொடர் பகுப்பாய்வு, எளிய பிற்செலவு மாதிரி மற்றும் விவரணப் பகுப்பாய்வு என்பவற்றின் மூலம் மொத்த அரச செலவினத்தில் இவ்வரிகளின் பங்களிப்பு கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு இவ்வாய்வில் இரண்டாம் நிலைத் தரவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

பிரதான நேரில் வரிகள் இலங்கையின் மொத்த அரச செலவினத்தில் நேர்க்கணிய ரீதியிலான தாக்கத்தினை செலுத்துகின்றன அத்தோடு, இலங்கையின் மொத்த வரி அரசிறையில் நேரில் வரியான பெறுமதிசேர் வரியானது அண்மைக் காலமாக பாரிய ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. இவ்வரியானது, பல்வேறுபட்ட மாற்றங்களினூடாக இலங்கையின் மொத்த அரச செலவினை ஈடுசெய்வதில் பங்களிப்பினை வழங்குகின்றது.

எனவே இலங்கையின் மொத்த அரச செலவினத்தை ஈடுசெய்ய வேண்டுமாயின், இலங்கையின் நேரில் வரி வருமானத்தின் பங்களிப்பினை அதிகரிப்பதோடு, அரச செலவினங்களைக் குறைத்து வரி வருமானங்களை அதிகரிப்பதனூடாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை குறைக்க முடியும். அத்தோடு, பெறுமதிசேர் வரியானது பொருளாதார வளர்ச்சிக்கு, பொருளாதார உறுதிப்பாட்டிற்கு மற்றும் பாதீட்டுப் பற்றாக்குறையில் (BTF) பங்களிப்புச் செய்வதோடு, இப் பெறுமதிசேர் வரியுடன் ஏனைய நேரில் வரிகளான கலால் வரிகள், இறக்குமதித் தீர்வைகள் என்பன இலங்கையின் அரச செலவினத்தை ஈடுசெய்வதில் சிறந்த வகையில் செயலாற்ற முடியும்.

**பிரதான சொற்கள்:** கலால் வரி, பெறுமதிசேர் வரி, இறக்குமதித் தீர்வை மற்றும் பாதீட்டுப் பற்றாக் குறை

## “இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்: தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயத்தினுடனான (SAFTA) ஓர் ஒப்பீட்டு ஆய்வு”

**Supervisor**
*Mr. AAM. Nufile,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. A. Ajana,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

1999 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (ISFTA) 2000 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. இதன் கீழ் பண்டங்கள் தீர்வைகள் அற்ற பண்டங்கள், தீர்வை சலுகை வழங்கப்பட்டுள்ள பண்டங்கள்இ தீர்வை சலுகை வழங்கப்படாத பண்டங்கள் என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இலங்கை- இந்திய உடன்படிக்கையின் முக்கிய நோக்கம் முன்னுரிமை வர்த்தக பங்காளருடனான வர்த்தகத்தின் மீதான தடைகளை அகற்றுவதன் மூலம் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துவதாகும். இக்கட்டத்தில் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் ஒன்றுக்கான அவசியம் பெரிதும் உணரப்பட்ட போது 2006 இல் தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் (SAFTA) SAARC நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டது. சார்க் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதே SAFTA இன் நோக்கமாகும். எனவே இவ்வாய்வில் இவ் இரு ஒப்பந்தங்களின் செயலாற்றம் குறித்தும் அவற்றுக்கிடையோன ஒப்பீட்டை மேற் கொள்வதுமே இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும், இவ் ஆய்வில் இரு நாடுகளிற்கிடையே வர்த்தக உடன்படிக்கையை முன்னெடுப்பதால் கிடைத்துள்ள நன்மை தீமைகளை கண்டறிவதுமாகும். அத்துடன், இந்திய இலங்கையின் வர்த்தகத்தின் மீது தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் எடுத்து வரக்கூடிய தாக்கங்களையும் கண்டறிவதுமாகும்.

இவ்வாய்வானது, இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது. 2000 – 2012 வரையிலான காலத் தொடர்த் தரவுகளை அடிப்படையாக கொண்டு இரு மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை அடையாளம் காண்பதற்கும் தரவுகளை மதிப்பீடு செய்வதற்கும் “பிற்செலவு ஆய்வானது” (Regression Model) பயன்படுத்தப்படவுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் SPSS எனும் மென் பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் மூலம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது, இலங்கையின் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி, வர்த்தக தொடர்பின் அபிவிருத்தி மட்டம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றிற்கான சிறந்த பிரதிநிதித்துவத்தை வழங்கும் எனவும் இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் என்பன இலங்கைப் பொருளாதாரத்துடன் நேர்க்கணிய தொடர்னைக் கொண்டிருகின்றது எனவும் இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கும் தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயத்துக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகிறது எனவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இலங்கை வர்த்தகத்தினை விரிவுபடுத்துவதோடு வர்த்தக பற்றாக்குறையினையும் குறைவடையச் செய்யும் மற்றும் அதிகளவில் பொருளாதாரத்தினை திறந்து விடும் நாடு அதிகளவு வர்த்தக செயற்பாடுகளை கொண்டிருக்கும் எனவும் கண்டறியப்பட்டது. சுதந்திர வர்த்தகம் மற்றும் சுங்கக் கூட்டு ஆகியவற்றின் கீழ் தீர்வை மற்றும் தீர்வையற்ற தடைகள் மேலும் விலகிக் கொள்ளப்படுமாதலால் வர்த்தகம் முதலீடு என்பன விரிவாக்கத்தை அடையும் எனக் கண்டறியப்பட்டது.

**பிரதான சொற்கள்:** ISFTA, SAFTA SAARC, Regression Model, and SPSS

## “இலங்கைப் பொருளாதாரத்தில் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் , அவர்கள் எதிர் நோக்கும் சவால்களும் : அகலவத்தைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு”


**Supervisor**
*Dr. SM. Ahamed Lebbe,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. MNF. Nasla,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழிலாக்கத்தை தொடர்ந்து, 1870ஆம் ஆண்டு இறப்பர் செய்கை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. (அமிர்தலிங்கம், 2008). இலங்கையின் விவசாயத்துறைசார் பொருளாதாரத்தில் பெருந்தோட்டத் துறையே ஆதிக்கம் செலுத்துகின்றது. இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய பயிர்களில் இறப்பரும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. 1950ஆம் ஆண்டில் இலங்கையினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறப்பர் 8சதவீதமாக பங்களிப்புச் செய்த நிலை மாறி, 1996, 2000ஆம் ஆண்டுகளில் முறையே 0.6, 0.4 சதவீதங்களாகக் குறைவடைந்து, 2006, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் முறையே 0.9, 1, 1.2 சதவீதங்களாக அதிகரித்துக் காணப்பட்டது (Central Bank of Sri Lanka, 2006 - 2011).

இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பை நோக்கும் போது மொத்த ஏற்றுமதியில் 1959, 1972, 1990, 2000, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் முறையே விவசாயத் துறையானது 90.5, 87.1, 36.3, 18.2, 26.7, 23.9 ஆகிய வீதங்களில் காணப்பட, கைத்தொழில் துறையானது 1959-1970 வரையில் ஏற்றுமதியில் எவ்வித பங்களிப்பும் செய்யவில்லை. எனினும் 1972, 1990, 2000, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் முறையே 2.8 52.2, 77.6, 70.7, 75.7 ஆகிய வீதங்களில் அதிகரித்துச் சென்றது. (Centrel Bank of Sri Lanka, 2011).

இதனடிப்படையில் நோக்கும் போது, ஏற்றுமதிக் கட்டமைப்பில் விவசாயத்தை விட கைத்தொழில் துறை கூடிய பங்களிப்பை வழங்கினாலும் தேறிய ஏற்றுமதியை பொருத்த வரையில் விவசாயத்துறையே கைத்தொழில்துறையை விட முன்னணியில் உள்ளது. கைத்தொழில் துறையின் தேறிய ஏற்றுமதியை விட விவசாயத் துறையின் தேறிய ஏற்றுமதியே அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறு தேறிய ஏற்றுமதியில் விவசாயத் துறை அதிகரிப்பைக் கொண்டிருந்தாலும் விவசாயத் துறையில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமானது கீழ்நிலையிலேயே உள்ளது.

அகலவத்தை பிரதேசத்தின் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனங்காணல் எனும் பிரதான நோக்கத்தையும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வருமானம், உணவு, வீடமைப்பு முதலியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கண்டறிதல், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் முதலிய உபநோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவதானம், நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல் முதலியவற்றின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகளாகவும், இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்,

துண்டுப்பிரசுரங்கள், அகலவத்தைப் பிரதேச செயலக அறிக்கைகள், இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தின் பதிவுகள், ஆண்டறிக்கைகள், இணையத்தளத் தகவல்கள், முதலியன இவ்வாய்விற்கான இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறை மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, முதலாம் நிலை , இரண்டாம் நிலை தரவுகள் விபரண ரீதியிலும், எளிய புள்ளிவிபரவியல் மாதிரிகள் மூலமும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை பெறப்பட்ட முடிவுகளின்படி, அகலவத்தைப் பிரதேசத்தைப் பொருத்த வரையில் 3312 ஏக்கர் நிலப்பரப்பில் இறப்பர் செய்கை இடம்பெறுகின்றது. ஆரம்பத்தில் இந்தியத் தோட்டத்தொழிலாளர்கள் வேலை செய்த இத்தோட்டங்களில், பிற்பட்ட காலங்களில் சிங்கள மக்களும் தொழில் புரிகின்றனர். இப்பகுதிகளில் போக்குவரத்து சேவைகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. அதேவேளை அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படாததால் இவர்களது பிரச்சினைகளில் வறுமை முதலிடம் வகிக்கின்றது. அவர்களின் வருமானத்திலும், வீடமைப்பிலும் சொத்துக்களிலும் இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையாவிட்டாலும் கல்வி, சுகாதாரத்தில் ஆரம்ப காலங்களைவிட தற்போது ஓரளவு மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை களஆய்வுகளின் மூலம் அறிய முடிந்தது.

**Key words:-** பெருந்தோட்டம் , ஏற்றுமதி , வருமானம், வாழ்க்கைத்தரம்.

## இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் ஊழிய ஊக்கப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்த பகுப்பாய்வு: பதுளை மாவட்டத்தின் தேயிலைத் தோட்டத்துறையை மையப்படுத்திய விசேட ஆய்வு


**Supervisor**
*Dr. SM. Ahamed Lebbe,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. DL. Sandiya Dilanee,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


இலங்கை பொருளாதாரத்தில் விவசாயத்துறை முக்கியப் பங்களிப்பை வகிக்கின்றதுடன் பெருந்தோட்டத்துறை அதனது உற்பத்திகளில் தொடர்ந்தும் சாதகப்போக்கை கொண்டிருக்கின்றமையானது விவசாயத்துறையின் பங்களிப்பை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. பெருந்தோட்டத்துறையில் தேயிலைக்கான முக்கியத்துவம் அதிகமாக காணப்படுகின்ற அதேவேளை, இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழிலில் மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலைவாய்ப்பு, அந்நியச்செலாவணி வருவாய் என்ற ரீதியில் தேயிலைக் கைத்தொழிலின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. (தயாபரன், 2008). பெருந்தோட்டத்துறை அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கிவருகின்ற துறையாக அமைவதால் பெருந்தோட்டத்துறையின் உற்பத்திக் காரணிகளில் ஊழியம் பிரதான இடத்தை வகிக்கின்றது. இங்கு ஊழியம் என்பது உடலாலோ அல்லது மூளையாலோ பணக் கூலியை அடிப்படையாகக் கொண்டு பணி செய்வதைக் குறிக்கும் (சடகோபன், 1990). ஊக்கப்படுத்தல் என்பது குறித்த தொழிலை நிறைவுடன் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் சலுகைகள், பயிற்சிகள் போன்றவற்றை குறிப்பதுடன் இது ஊழியர்களின் தேவையோடு இணைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது (புஸ்பநாதன், 2004). இவ்வாய்வானது பெருந்தோட்டத்துறையில் ஊழியர் ஊக்கப்படுத்தல் செயற்பாடுகளின் நிலை மற்றும் அதனது நடைமுறை தன்மையினை இனங்காண்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்காக முதலாம், இரண்டாம்நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம்நிலை தரவுகளில் அவதானிப்பு, நேர்காணல், வினாக்கொத்து, குழுக்கலந்துரையாடல் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அவை பண்புசார் மற்றும் அளவுசார் முறைகளில் Microsoft office Package, mini tab போன்ற மென்பொருள்களை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

ஆய்வின் முடிவின்படி, பதுளை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தோட்டங்களின் ஊழியர்கள் வேலையின் போதோ, வேலையின் பின்னரோ குறைந்தளவான ஊக்கப்படுத்தல்களையே அனுபவிக்கும் போக்கு காணப்படுகின்றதுடன், தேயிலை உற்பத்தி அதிகரிப்பை ஏற்படுத்த புதிய தொழிநுட்பமுறைகள் கம்பனிகளால் உட்புகுத்தப்பட்டாலும் அதனை பயன்படுத்தக்கூடியவகையில் ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படாத தன்மையை காண முடிகிறது. யதார்த்தத்தில் கைத்தொழில் துறைகளை நோக்கிய ஊழியப் புரழ்வும், ஊழிய நகர்வும் அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது.



**Key words (பிரதான சொற்கள்)** : ஊழியர், ஊழிய ஊக்கப்படுத்தல், பெருந்தோட்டத்துறை

## வருமான சமத்துவத்தினை ஏற்படுத்துவதில் ஸகாத்தின் வகிபாகம்: அம்பாறை மாவட்டத்தினை மையப்படுத்திய ஓர் ஆய்வு)

**Supervisor**
*Dr. SM. Ahamed Lebbe,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MF. Fazeela,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

பல தசாப்தங்களாக உலகின் அனைத்து நாடுகளினாலும் எதிர்நோக்கப்படும் பாரிய பிரச்சினையாக வருமான சமத்துவமின்மை காணப்படுகின்றது. வருமான சமத்துவமின்மை என்பது குறித்த ஒரு நாட்டில் எல்லா நபர்களுக்கும் குறித்த சமவிகிதத்தில் வருமானம் பகிரப்படாத நிலையாகும் (Todaro,1981). இது நாட்டின் GDP மற்றும் GNP என்பவற்றை நேரடியாக பாதித்து அபிவிருத்திக்குத் தடையாக அமைகின்றது. அனைத்து உலக நாடுகளின் கினி குணகமானது 2008 உடன் ஒப்பிடுகையில் 2009 இல் 0.532 இலிருந்து 0.521 ஆக குறைவடைந்து காணப்பட்ட போதிலும் உலகின் 10 சதவீத சனத்தொகையானது உலக மொத்த வருமானத்தில் 42 சதவீதத்தினை உள்ளடக்கியுள்ளது (UNDP, 2011). இவ்வருமான இடைவெளிப் பிரச்சினைக்குத் தீர்வாக உலகளாவியரீதியில் மேலைத்தேயப் பொருளாதார அமைப்பினால் பின்பற்றப்பட்டு வருகின்ற இயக்கப்பாட்டு முறையே வரிமுறைமையாகும். இருப்பினும் வருமான இடைவெளிப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட இத்திட்டங்கள் தோல்வியடைந்து காணப்படும் நிலையில், உலகில் இஸ்லாமிய நாடுகளால் பின்பற்றப்பட்டுவருகின்ற இஸ்லாமிய பொருளாதாரத்தின் ஸகாத் முறைமையானது ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் மாத்திரம் பணம் சுழல்வதனைத் தடுத்து, செல்வப் பங்கீட்டை சீர்செய்து, சமத்துவத்தை ஏற்படுத்துகின்றது. இப்பிரச்சினையானது உலகளாவியரீதியில் மட்டுமன்றி இலங்கையிலும் பாரிய ஒரு பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. 2009∴2010 இன் ஆண்டறிக்கைக்கிணங்க கினி குணகமானது 0.49 ஆக கணிப்பிடப்பட்டது (HIES, 2012). ஆய்வுப்பிரதேசமான அம்பாறை மாவட்டத்தின் 70 சதவீதமான முஸ்லீம்களினை தன்னகத்தே கொண்டுள்ள சம்மாந்துறை பிரதேசத்தில் மக்களிடையே வருமானமானது சமமற்ற முறையில் பகிரப்பட்டுக் காணப்படுகின்றமையானது அப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக அமைகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் ஸகாத் நிதியமானது 1976 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன்பின்னணியில் வருமான சமத்துவத்தை ஏற்படுத்துவதில் ஸகாத் நிதியத்தின் செயலாற்றத்தினை மதிப்பிடும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குத் தேவையான முதலாம் நிலைத்தரவுகளானது நோக்க மாதிரி எடுப்பு முறை மூலம் 200 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள், களஆய்வு மற்றும் இலக்குக்குழு கலந்துரையாடல்கள் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகளானது சம்மாந்துறை ஸகாத் நிதியம், பிரதேச செயலகம், இணையத்தளங்கள் மற்றும் சஞ்சிகைகள் வாயிலாகவும் பெறப்பட்டன. மேற்குறித்த தரவுகளானது, மொத்த வருமானமானது ஸகாத்தின் தொழிற்பாடாக அமைகின்றது $(TI = f(Z))$ என்பதனை மதிப்பிடும் நோக்கில் $Y = \beta_0 + \beta_1 x + U_t$ என்னும் பிற்செலவு மாதிரியுரு பொருத்தப்பட்டு கணனிக் கணிப்பீட்டின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வின் முடிவிற்கிணங்க, இவ்வருமான சமமின்மையினால் சம்மாந்துறை பிரதேசத்தில் 45 சதவீதத்தினர் உளரீதியான ஏற்றத்தாழ்வினையும் 40 சதவீதமான மக்கள் வறுமையினையும் அனுபவிக்கின்ற அதேவேளை 15 சதவீமானவர்கள் சமூகத்தில் புறந்தள்ளப்படுவதுடன் தங்களது அடிப்படை தேவைகளைக்கூட நிறைவுசெய்ய முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இப்பிரதேசத்தின் வருமான சமமின்மைக்கு பிரதான காரணமாக குறிப்பிட்ட ஒருசாராரிடம் மாத்திரம் பரம்பரையாக சொத்துக்கள் குவிக்கப்படுதல் அறியப்பட்டுள்ளது. ஸகாத்திற்கும் மக்களின் மொத்த வருமானத்திற்குமிடையிலான தொடர்பினை மதிப்பிடும் நோக்கில் பொருத்தப்பட்ட பிற்செலவு மாதிரியுருவின் முடிவிற்கிணங்க, Adj. $R^2$ ஆனது 0.660 ஆக பெறப்பட, F மதிப்பீடான 96.202 ஆனது, மறுக்கப்பட்ட பிரதேசத்திற்குள் வருவதனால் சம்மாந்துறை பிரதேசத்தில் ஸகாத்தினுடைய காத்திரமான பங்கீடானது அப்பிரதேச மக்களின் வருமான சமத்துவத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தவில்லை என்னும் கருதுகோள் மறுக்கப்படுகின்றது. வருமான சமத்துவமின்மையை குறைத்து ஸகாத் நிதியத்தின் செயலாற்றத்தை அதிகரிக்கும் முகமாக ஸகாத் நிதியத்தினை கணனிமயப்படுத்துவதுடன் மக்கள் மத்தியில் உழைத்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தினை வளர்க்கும் முகமாக விழிப்பூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். ஸகாத்தினை தர மறுப்பவர்களுக்கு எதிராக சமயரீதியான கடுமையான நடவடிக்கைகளினை எடுப்பதனூடாக ஸகாத் நிதியத்தினை மேலும் வளர்க்க முடியும்.

***பிரதான சொற்கள் (Key words)*** : வருமான சமத்துவமின்மை, வறுமை, செல்வப்பகிர்வு, ஸகாத்

**“இலங்கையின் பொருளாதார செயற்திறனில் வீதி அபிவிருத்தியின் பங்களிப்பினை பகுப்பாய்வு செய்தல் - யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியிலிருந்தான சான்றாதாரங்கள்”**

**Supervisor**
*Mrs. AR. Sithy Jesmy,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. MHM. Rozan,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

இன்று உலகலாவிய ரீதியில் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான ஒரு நிபந்தனையாக வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியனை நாடுகள் உணர்ந்துள்ளன. இதற்காக உலக நாடுகள் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த வகையில் இலங்கையிலும் அன்மைக் காலமாக வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு வீதி வலையமைப்பு முக்கியமானது என்பது உணரப்பட்டதன் காரணமாக, அரசாங்கமானது வெளிநாடடு நிதியளிப்பைக் கொண்டு துரித அபிவிருத்தித்திட்டம் ஒன்றை புதிதாக ஆரம்பித்துள்ளது. (பொருளியல் நோக்கு, Nov/Dec, 2011). மேலும் இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் போக்குவரத்து துறையின் பங்களிப்பு முறையே 2010 யில் 11.5% உம் 2011 யல் 11.8% உம் ஆக காணப்பட்டது. (தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை 2010/2011).

அன்மைக் காலமாக இலங்கை பொருளாதார வளர்ச்சியில் என்றுமில்லாதவாறு சுசந்திரத்திற்க்குப் பின்னர் மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தினை 2010 யில் 8.0% யினையும், 2011 யில் 8.3% அடைந்து கொண்டது. (தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை 2010/2011) இந்த வகையிலான பொருளாதார வளர்ச்சி வீதத்தின் அடைவதற்க்கு காரணம் யுத்ததுக்கு பின்னரான இலங்கையில் மேற்க் கொள்ளப்பட்டு வருகின்ற வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியே காரணம் என பொதுவாக கூறப்படுகின்றது.

உற்பத்தித் துறைக்கான மூலப் பொருட்களை உரிய நேரத்தில் கொண்டு செல்லவும், உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லவும் விரைவான போக்குவரத்து இன்றியமையாததாகும். இதற்கு போதுமான வீதி அபிவிருத்தி இடம் பெறல் வேண்டும். பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான ஏனைய காரணிகளை தூண்டுவதற்கு ஒரு உந்துசக்தியாகவும் வீதி அபிவிருத்தி காணப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு வீதி அபிவிருத்தி ஒரு தேவைப்பாடாக இருப்பினும், வீதி அபிவிருத்தி மட்டுமே பொருளாதார அபிவிருத்தியாக அமையாது இதற்கு அதனோடு இணைந்த வேறு காரணிகளும் தேவையாக உள்ளது. புதிய முதலீடுகளை கவருவதற்கும், உற்பத்தி பெருக்கத்திற்க்கும் வீதி அபிவிருத்தி ஒரு முக்கிய காணியாகக் காணப்படுகின்றது. புதிய முதலீட்டாளர்கள் நாட்டுக்குள் அல்லது பிரதேசத்துக்குள் உள்வருவதற்க்கும், தனது உற்பத்தி நடவடிக்கைகளை நகர்த்துவதற்க்கும் வீதி அபிவிருத்தி மிக முக்கிமாக காணப்படுகின்றது.

இந்தவகையில் இலங்கையில் யுத்ததுக்கு பிற்பட்ட காலப்பகுதியின் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட வீதி அபிவித்தி திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தியில் எத்தகைய பங்களிப்பினை வழங்கியுள்ளது என்பதனை கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது, இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாக கொண்டு

காணப்படுகின்றது. அந்த வகையில் மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், வீதி அபிவிருத்தி தினைக்கள அறிக்கைகள், இலங்கை போக்குவரத்து குறிகாட்டி அறிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பன தரவு மூலங்களாக கொள்ளப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக வரைபட முறை, விவரணப் புள்ளிவிபரவியல், பிற்செலவு முறை என்பன பயண்படுத்தப்படவுள்ளன. SPSS மென் பொருள் இதற்காகப் பயண்படுத்தப்படவுள்ளன. இவ்வாய்வின் மூலம் முக்கிய முடிவாக வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது பொருளாதார அபிவிருத்தி மீது நேர்கனிய தாக்கத்தை கொண்டுள்ளது என்பது முடிவாக அமைந்துள்ளது.

**Key words**: வீதி அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு, வீதி வலையமைப்பு.

**"இலங்கையின் கல்விமுறைமைக்கும் வேலையின்மைப் பிரச்சினைக்கும் இடையிலான தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்தல்"**

**Supervisor**
*Mrs. AR. Sithy Jesmy,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. B. Usha,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வியென்பது அபிவிருத்திக்கும், சமூக, பொருளாதார மாற்றத்திற்கும் ஓர் பிரதான பங்களிப்பு காரணியாக விளங்குகின்றது. அதாவது சமூக பொருளாதார மாற்றத்திற்கும் நெடுங்காலம் நீடித்திருக்கத்தக்க பொருளாதார மாற்றத்திற்குமான மிகவும் சக்தி வாய்ந்த கருவிகளில் ஒன்றாக கல்வி காணப்படுவதாகும். இதனால் கல்வியினை மையப்படுத்தி பொருளாதாரத்தினை முன்னெடுத்து செல்வதற்கான உலக நாடுகள் தமக்கென ஒரு கல்விமுறைமையினை பின்னற்றத்தொடங்கின(பொருளியல் நோக்கு, ஆவணி/புரட்டாதி, 2010).

இலங்கையின் கல்வி முறைமையானது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான வாய்ப்புக்களை பரவலாக வழங்குவதில் கண்ட வெற்றியானது மூன்றாம் நிலைக்கல்வியை விரிவுப்படுத்துவதில் அடைந்துக்கொள்ளவில்லை. கடந்த பல ஆண்டகளாக இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வியின் குறிப்பாக பல்கலைக்கழக கல்வியின் போக்குகளும் விளைவுகளும் 1970இன் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட திறந்த சந்தைப் பொருளாதார கொள்கைகளுடன் இணைந்து செல்வதாக இருக்கவில்லை. இதனால் விரிவடைந்துவரும் உலகமயமாக்களின் பின்னணியில் இலக்கற்ற கல்விமுறை நாட்டின் தொழிற்சந்தையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது. எவ்வாறெனின், இது நாட்டின் மொத்த வேலையின்னமயில் உயர்ர்கல்வித்தமை கொண்டோர் மத்தியிலான வேலையின்மையினை மிக மோசமாக அதிகரிக்கச் செய்தது(மத்திய வங்கி, ஆண்டறிக்கை, சிறப்புக்குறிப்பு, 2000).

இதனை 1987-2012ம் ஆண்டுவரையிலான ஊழியப்படையின் தரவுகளை கொண்டு அவதானிக்கும் போது, 1987 ஆண்டு மொத்த வேலையின்மையானது 14.1 சதவீதமாக காணப்பட்டது. இதில் க.பொ.த(உ/த) மற்றும் அதைவிட உயர்வான கல்வித்தகைமை கொண்டோரின் வேலையின்மையானது 10.7 சதவீதமாகும். இதனை தொடர்ந்து 1995 ஆண்டு மொத்த வேலையின்மையானது 12.3சதவீதமாவும், 2005ம் ஆண்டு 7.6சதவீதமாவும், 2010ம் ஆண்டு 4.9சதவீதமாவும் நிலவியது (மத்திய வங்கி, 1987-2012). இவ்மொத்த வேலையின்மையில் உயர்ர்கல்வித்தமை கொண்டோர் மத்தியிலான வேலையின்மையானது முறையே 1995 இல் 18.4சதவீதமாகவும், 2000 இல் 25.3சதவீதமாகவும், 2010 இல் 39.7சதவீதமாகவும் காணப்பட்டது(இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்கள அறிக்கை 1987-2012). இப்புள்ளிவிபரங்கள் வேலையின்னமயானது வீழ்ச்சி போக்கினை காட்டிய போதும் உயர்கல்வித்தகைமையுடையோர் மத்தியிலான வேலையின்மையானது அதிகரித்துச் செல்லும் தன்மையினை கொண்டிருப்பதனையே பிரதிபலிக்கின்றது. இவ்உயர் தொழிலின்மைக்கு தொழிற்சந்தை நிலைமையுடன் சிறிதளவே பொருந்தக்கூடிய நிரம்பலை அடிப்படையாகக்கொண்ட கல்வி முறைமை பின்பற்றப்படுவதே காரணம் என பொதுவாக எடுத்துரைக்கப்படுகின்றது(மத்திய வங்கி ஆண்டறிக்கை, சிறப்புக்குறிப்பு,2000).

எனவே இங்கு எதிர்கால பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாக கொண்ட அறிவு சார்ந்த சவால்களை எதிர்கொள்ளத்தக்க விதத்தில் இலங்கையின் பல்கலைக்கழக கல்வியை மீள மாற்றியமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தொழிற்சந்தை தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நவீன தரமிக்கத் தகுதிகளை ஒருங்கிணைக்கத்தக்க விதத்திலும் மீளமைப்பதும் நவீன தொழிநுட்பங்களை பழகிக்கொள்வதற்கான வழிவகைகளை மேம்படுத்துவதும் சந்தை சார்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் கிடைக்கத்தக்க சந்தர்ப்பங்களை விரைவுப்படுத்திக் கொள்வதும் பல்கலைக்கழகக்கல்விக்கு அவசியமானவையாகவுள்ளன.

இவ்வாய்வின் பிரதான நோக்கம் இலங்கையின் கல்விமுறைமைக்கும் வேலையில்லாப் பிரச்சினைக்கும் இடையில் எத்தகைய தொடர்பு காணப்படுகிறது என்பதனை கண்டறிவதாகும். பகுப்பாய்வுக்காக இரண்டாம் நிலைத்தரவுகள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இரண்டாம் நிலைத்தரவுகள் மத்திய வங்கியினது ஆண்டறிக்கைகள், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கைகள், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகள், உயர் கல்வி அமைச்சின் வருடாந்த அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள அறிக்கைகள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளாது SPSS புள்ளிவிபரவியல் மென்பொருள் தரவு பொதிகளை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு வரைபடங்கள் அட்டவணைகளின் துணையுடன் தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டள்ளன. இவ்வாய்வின் படி இலங்கையின் கல்விமுறைமைக்கும் வேலையின்மைப் பிரச்சினைக்கும் இடையில் ஒரு எதிர்கணிய தொடர்பு காணப்படுகிறது என்பது முடிவாக பெறப்பட்வுள்ளது.

**Key words**: மனித மூலதனம், அகவய வளர்ச்சி, கல்விமுறைமை, வேலையின்மை, ஊழியப்படை

# இலங்கைப் பொருளாதாரத்தில் தனியார் வெளிநாட்டுமாற்றல் பெறுவனவுகள் : பிராந்தியரீதியானஓர் ஒப்பீட்டாய்வு.

**Supervisor**
*Dr. SM. Ahamed Lebbe,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. N. Sangeethan,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

வெளிநாட்டு தனியார் பண அனுப்பலானது நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதுடன் பருநிலை பொருளியலின் நிலைத்து நிற்கும் தன்மைக்கும் துணைபுரிகிறது. வறுமைக்குறைப்புக்கு மிக முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது(சர்வதேச நாணய நிதியம்,.2005). வெளிநாட்டு தனியார் பண அனுப்பல்கள் வீட்டு துறையினர்களால் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? என்பது மிக முக்கியமாகும். வெளிநாட்டு தனியார் பண அனுப்பலானது குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு அல்லது அவர்களின் செலவீட்டை அதிகரிக்க் அதாவது நுகர்வு, வீட்டு வசதி, கல்வி மற்றும் சிறு வியாபார உருவாக்கம் போன்றவற்றிட்கு உதவுகிறது (Deshingkar and Abeeyar,2006).இலங்கைப் பொருளாதாரத்தில் அந்நியசெலாவணியை ஈட்டித்தரக்கூடிய பிரதான மூலகங்களுள் ஒன்றாய் வெளிநாட்டுதனியார் பணவனுப்பல்களானது காணப்படுகின்றது. ஒரு மில்லியனுக்கு அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில்புரிவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குடிபெயர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக,நாட்டிற்குள் உட்பாய்கின்ற வெளிநாட்டு செலாவெணியின் அளவு 2010ஆம் ஆண்டில் உட்பாய்ச்சல் அளவான அமெரிக்கடொலர் 4.1 மில்லியன் தொகையோடு ஒப்பீடு செய்யும்போது 2011ஆம் ஆண்டில் அத்தொகையானது அமெரிக்கடொலர் 5.1 மில்லியனாக பாரியஅளவில் அதிகரிப்பை காட்டி நிற்கின்றது(வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிக்கை,2013).

இலங்கையினைப்பொறுத்தவரையில் தற்போது வெளிநாட்டில் தொழில்புரிபவர்களில் 94 சதவீதமானவர்களில் மத்தியகிழக்குநாடுகளிலேயே தொழில் புரிகின்றனர்(இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்கள அறிக்கை2009). ஏனையவர்கள்கிழக்காசியா,தென்கிழக்காசியா,அவுஸ்ரேலியா,ஐரோப்பாபோன்றபிராந்தியங்களிலேயேஅதிகமாகதொழில் புரிகின்றனர். இலங்கையின் மொத்ததனியார் பணஅனுப்பல்களில் சர்வதேச பிராந்திய ரீதியானபங்களிப்பை அறிந்து கொள்வதுடன் அதனை மேலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளை அடையளப்படுத்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக காணப்படுகின்றன.

இவ்வாய்வானது முதலாம் இரண்டாம் நிலைத்தரவுகளை பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதன்னிலைத்தரவுகள் நேர்காணல்கள் மூலமாகபெறப்பட்டுள்ளன. வெளிநாட்டில் தொழில் புரிபவர்கள் மற்றும் வெளிநாட்டு பயண முகவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்கள அறிக்கைகள், மத்தியவங்கி ஆண்டு அறிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் மற்றும் பத்திரிகைக்கட்டுரைகள் மூலமும் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள்

பெறப்பட்டுள்ளன. மேலும் 1990 – 2010 வரையிலான காலத்தொடர் தரவுகளை அடிப்படையாகக் கொண்டுஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட காலத்தொடர் தரவுகளை மதிப்பீடு செய்வதற்கு விவரண புள்ளிவிபரமுறைகள், பிற்செலவுஆய்வுமுறைகள்,அட்டவணைகள் மற்றும் வரைபடங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக SPSS மென்பொருள் பயன்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பின்வரும் மாதிரியுருவானது மொத்த வெளிநாட்டு பணஅனுப்பல்களில் சர்வதேசபிராந்தியங்களின் பங்களிப்பை அறியப்பயன்படுத்தப்படுகிறது. பகுப்பாய்வின் படி,மத்தியகிழக்குநாடுகளின் மூலமானபணஅனுப்பல்களின்பிற்செலவுக் குணகம் 1.69 ஆகவும் நிகழ்தகவுப் பெறுமானம் (P – Value) 0.000 ஆகவும் காணப்படுகின்றது. மத்தியகிழக்குநாடுகளின் மூலமானபணஅனுப்பல்கள் ஒருஅலகால் அதிகரித்தால் மொத்த வெளிநாட்டு பணஅனுப்பல்கள் 1.69அலகால் அதிகரிக்கும். இது நேர்க்கணியத் தொடர்பினைக் காட்டுகின்றது. இம்மாறியின் நிகழ்தகவுப் பெறுமானம் 0.000 ஆகக் காணப்படுவதனால் மத்திய கிழக்கு நாடுகளின் மூலமான பணஅனுப்பல்களின ்செல்வாக்கானது மொத்த வெளிநாட்டு பணஅனுப்பல்களில் புள்ளிவிபரரீதியாக பொருளுள்ளவகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே இங்கு மொத்த பண அனுப்பலில் மத்திய கிழக்குநாடுகளிலிருந்தான பணஅனுப்பல்களானது செல்வாக்குச் செலுத்துகின்றதுஎன இவ்வாய்வு முடிவுசெய்கின்றது.

**Keywords:** அந்நிய செலாவணி, வெளிநாட்டு தனியார் பணஅனுப்பல்கள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு, ஊழியப்படை.

# இலங்கையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களின் பொருளாதார செலவினை மதிப்பீடு செய்தல் தொடர்பான பகுப்பாய்வு: கண்டி மாவட்டத்தினை மையப்படுத்திய ஆய்வு


**Supervisor**
*Mrs. AR. Sithy Jesmy,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MM. Fathima Nasmiya,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இலங்கை வாழ் மக்களில் 99 சதவீதமானவர்களின் அடிப்படை போக்குவரத்து பாவனை மூலமாக, தரைவழி போக்குவரத்து முறைமை காணப்படுகின்றது. பொது வீதி, புகையிரத வீதி என்பன இவர்களின் தரைவழி போக்குவரத்து முறைமையின் பிரதான உப மூலங்களாக காணப்படுகின்றன. எனது ஆய்வு பரப்பினுள் உள்வாங்கப்படுகின்ற மூலமான, பொது வீதியின் உள்ளீடுகளை பார்க்கின்ற பொழுது A, B,C, D, E மற்றும் E1 வகுப்பு பாதைகள் உள்ளடங்களாக இலங்கையின் மொத்த பாதை வலையமைப்பு நீளம் 29,850 km ஆகும். மேலும் மொத்த வாகன சனத்தொகையானது 3,374,479 ஆக காணப்பட 2012 இல் மாத்திரம் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 397,295 ஆக காணப்படுகின்றது என்பது குறிப்பிடப்பட வேண்டியதொரு விடயமாகும். (Central Bank Report 2012)

மேலும் வாகன பாவனை அதிகரிப்பிற்கு இயைபாக வீதி விபத்துகளினுள் உள்வாங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையும் 2010, 2011, 2012 ஆம் வருடங்களில் முறையே 37,653 40,258 42,145 ஆக தொடர்ந்து அதிகரித்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது (Police Head Quarters of Sri Lanka, Colombo 01). மேற்படி தரவுகளானது பொலிசாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட வீதி விபத்துக்களை மாத்திரமே உள்ளடக்கியுள்ளது என்பது, அதாவது இத்தரவுகளில் கிராமப்புரங்களில் இடம்பெறுகின்ற, பொறுப்பாளிகளால் சுயமாக தீர்த்துக் கொள்ளப்படுகின்ற, பொலிசாரின் கவனத்திற்கு கொண்டுவரப்படாத விபத்துக்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது ஒரு வரையறையாக காணப்படுகின்றது. இவ்விபத்துக்கள் மூலமான மொத்த உயிர் இழப்புக்கள் 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 2722, 2677, 2444 ஆக காணப்படுகின்றது. (Police Head Quarters of Sri Lanka, Colombo 01)

கடந்த மூன்று வருடங்களாக இலங்கையில் அதிகளவில் பதிவு செய்யப்பட்ட விபத்து, மோட்டார் சைக்கிள் விபத்துகளே ஆகும் என்பது நிரூபிக்கப்பட்டதொரு விடயமாக காணப்படுகின்றது. 2010, 2011, 2012 ஆம் வருடங்களில் முறையே 8566, 9374, 9877 மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (Police Head Quarters of Sri Lanka, Colombo 01) இவற்றினை மொத்த விபத்துக்களின் சதவீதமாக பார்க்கின்ற பொழுது, மொத்த விபத்துக்களில் சுமார் 23 சதவீதமான பங்கினை மோட்டார் சைக்கிள் விபத்துகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும் இவ்வருடங்களில் பதிவு செய்யப்பட்ட வீதி விபத்துகளின் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கையில் பாதசாரிகளிற்கு அடுத்ததாக அதிக எண்ணிக்ககையினராக மோட்டார் சைக்கிள் சாரதிகள் காணப்படுகின்றனர். மோட்டார் சைக்கிள் சாரதிகளின் எண்ணிக்கையுடன் அவர்களுடன் பயணித்த நபர்களின் இறப்புகளினை இணைக்கும் பொழுது அது பாதசாரிகளின் எண்ணிக்கையையும் விஞ்சி காணப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. (Police Head Quarters of Sri Lanka, Colombo 01)

மேற்கூறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களானவை வீதி விபத்துக்களின் நேரடியான தாக்கங்களை சுருக்கமாக தெளிவுபடுத்துபனவாக காணப்படுகின்றன. இதற்கு அப்பால் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கம் செலுத்துகின்ற பிரதானமான காரணியாக வீதி விபத்துக்கள் காணப்படுகின்றன அத்தோடு அதிக எண்ணிக்கையினரின் பாவனை மூலமான மோட்டார் சைக்கிள் காரணமாக ஏற்படுகின்ற விபத்துக்கள் இளம் தலைமுறையினரிடையே பாரிய தாக்கம் செலுத்தவதாகவும் காணப்படுகின்றது. இவற்றிற்கமைய 2012, 2013 ஆம் வருடங்களில் கண்டி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்துக்களின் பொருளாதார செலவினை மதிப்பீடு செய்வதாக இவ்வாய்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாய்வு கற்கையில், 2012, மற்றும் 2013 ஆம் வருடங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களின் பொருளாதார செலவினை மதிப்பீடு செய்வதில் Human Capital method பயன்படுத்தப்படவுள்ளது. இதற்காக ஐக்கிய இராச்சியத்தின் Transport Research Laboratory இனால் முன்வைக்கப்பட்டுள்ள, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இடம்பெறுகின்ற வீதிவிபத்துக்களின் பொருளாதார செலவினை மதிப்பீடு செய்வதில் பயன்படுத்தப்பட வேண்டிய கணிப்பியல் நுட்ப முறைகளிற்கான வழிகாட்டல்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதனை கணிப்பிடுவதற்கான தரவுகள் மத்தியவங்கி ஆண்டறிக்கை, பொலிஸ் தலைமையகம், பொலிஸ் நிலையம், பொது வைத்தியசாலை, காப்புறுதி நிறுவனங்கள் முதலான இரண்டாம் நிலை தரவு மூலகங்களினூடாக சேகரிக்கப்படவுள்ளன. மத்தியவங்கி ஆண்டறிக்கைகளினூடாக இலங்கையின் பாதை வலையமைப்பு தரவுகள், வாகன சனத்தொகை தொடர்பான தரவுகள், புதிய வாகன பதிவு தரவுகள் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டன. நிர்வாக செலவுகள் மற்றும் சொத்து சேதங்கள் தொடர்பான தரவுகள் காப்புறுதி நிறவனங்களிடமிருந்தும், பொலிஸ் நிலையங்களிலும் பெறப்படவுள்ளன. வருடாந்த மொத்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை, விபத்துக்குள்ளான வாகன வகைகள், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை என்பன பொலிஸ் தலமையகத்திலிருந்தும், மருத்துவ செலவுகள் தொடர்பான தரவுகள் பொது வைத்தியசாலைகளிலிருந்தும் பெறப்படவுள்ளன.

படையாக்க மாதிரி எடுப்பு முறையினூடாக விபத்துக்குள்ளானவர்களில் மாதிரி அலகுகள் தெரிவு செய்யப்படவுள்ளதோடு, வினாக்கொத்து முறைமையினூடாக இவர்களிடமிருந்து முதனிலை தரவுகள் பெறப்படவுள்ளன. தரவு பகுப்பாய்விற்காக SPSS, Excel முதலான புள்ளிவிபரவியல் மென்பொருட்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இவ்வாய்வானது ஆய்வு பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளின் பொருளாதார சுமை எவ்வளவு என்பதனையும், உயிராபத்தான விபத்துக்களின் (Fatal accidents) மொத்த பொருளாதார செலவுகளில் பெரும் பங்கு விபத்துக்குள்ளானவர்களின் இழப்பினாலும், நிலையானதான ஊனத்தினாலும் ஏற்பட்ட வருமான இழப்பின் காரணமாக தோற்றம் பெறுகின்றது என்பதனையும், ஆபத்தான விபத்துக்களில் (Serious Injury Accidents) மருத்துவ செலவுகள் பெரும்பங்கு வகிக்கின்றது என்பதையும், சிறிய பாதிப்புகளுடனான விபத்துக்களில் மற்றும் சொத்து சேதத்துடன் மாத்திரமான விபத்துக்களில் (Slight & Damage only Injury Accidents) சொத்து சேதங்களிற்கான செலவு பாரிய பங்களிப்பு செய்கின்றது என்பதனையும் இனங்காணுவதாக உள்ளது.

**Key words:** Fatal accidents, Serious Injury Accidents, Slight Injury & Damage only Accidents, Human Capital method, Excel, SPSS